தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்புகொள்ள

கோவை	94425 04156
மேட்டுப்பாளையம்	94878 42563
பெ.நா.பாளையம்	98425 63953
சூலூர்	98422 44599
அன்னூர்	91502 49095
பொள்ளாச்சி	89034 44119
வடவள்ளி	98436 52523
வால்பாறை	94863 24619

தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...

கோயம்புத்தூர்	: 97902 12447
மேட்டுப்பாளையம் & அன்னூர்	: 77088 26235
சூலூர்	: 73730 55255
மதுக்கரை	: 88701 48269
பொள்ளாச்சி	: 90435 00177

உதவி மைய எண் : 88070 00216

கோடை விடுமுறை: பரளிக்காடு சூழல் சுற்றுலா மையம் மே 31 வரை செயல்படும்

மேட்டுப்பாளையம், மே 1: கோடை விடுமுறையையொட்டி, பரளிக்காடு சூழல் சுற்றுலா மையம் மே 1-ஆம் தேதி முதல் 31-ஆம் தேதி வரை தொடர்ந்து செயல்படும் என்று வனத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அருகே மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பில்லூர் அணை உள்ளது. இந்த அணையை சுற்றிலும் சுமார் 30-க்கும் மேற்பட்ட பழங்குடியின மலைக் கிராமங்கள் உள்ளன. இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் காரமடை வனத் துறை சார்பில் பரளிக்காடு சூழல் சுற்றுலா மையம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவர்.

பரளிக்காடு வரும் சுற்றுலாப் பயணிகள் https://Coimbatorewilderness.com/ என்ற இணையதளத்தில் முன்பதிவு செய்து கட்டணம் செலுத்த வேண்டும். நேரடியாக வருவோருக்கு அனுமதியில்லை.

பரளிக்காடு சூழல் சுற்றுலா மையத்தில் பரிசல் சவாரி செய்த சுற்றுலாப் பயணிகள்.

சூழல் சுற்றுலா மையத்துக்கு வரும் பயணிகளுக்கு பில்லூர் அணையில் பரிசல் பயணம், பழங்குடியின மக்கள் சார்பில் வழங்கப்படும் 10-க்கும் மேற்பட்ட உணவு வகைகள், அத்திக்கடவு ஆற்றில் குளியல், பழங்குடியினர் நடனம் என வனத் துறை சார்பில் ஏற்பாடுகள் செய்யப்படும்.

இந்நிலையில், கோடை விடுமுறையையொட்டி, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மே 1-ஆம் தேதி முதல் மே 31-ஆம் தேதி வரை பரளிக்காடு சூழல் சுற்றுலா மையம் தொடர்ந்து செயல்படும் என்று வனத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து காரமடை வனச் சரகர் ஜோசப் ஸ்டாலின் கூறியதாவது:

தற்போது கோடை விடுமுறை தொடங்கியுள்ளதாலும், அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதாலும் வார இறுதி நாள்களில் 100-க்கும் மேற்பட்டோர் பரளிக்காடுக்கு வரத் தொடங்கியுள்ளனர். பயணிகள் வசதிக்காக அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், கோடை விடுமுறையையொட்டி, சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக பரளிக்காடு சூழல் சுற்றுலா மையம் மே 1-ஆம் தேதி முதல் 31-ஆம் தேதி வரை தொடர்ந்து செயல்படும் என்றார்.

நாளை 'நீட்' தேர்வு

மாவட்டத்தில் 16 மையங்களில் 7,181 பேர் எழுதுகின்றனர்

கோவை, மே 1: இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான 'நீட்' தேர்வு கோவையில் ஞாயிற்றுக்கிழமை (மே 3) நடைபெறுகிறது. இந்தத் தேர்வை 16 மையங்களில் மொத்தம் 7,181 பேர் எழுத உள்ளனர்.

இளநிலை எம்பிபிஎஸ், பிடிஎஸ் மாணவர் சேர்க்கைக்காக தேசிய தேர்வு முகமை சார்பில் ஆண்டுதோறும் 'நீட்' தேர்வு நடத்தப்படுகிறது. நடப்பு ஆண்டுக்கான தேர்வு மே 3 -ஆம் தேதி நடைபெறுகிறது. இந்தத் தேர்வுக்கு கோவை மாவட்டத்தில் 7,181 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களுக்காக சூலூர் கேந்திரியா வித்யாலயா, பீளமேடு பிஎஸ்ஜி கல்லூரி, சுங்கம் நிர்மலா மகளிர் கல்லூரி, ஜிஎன் மில்ஸ் கொங்குநாடு கலை, அறிவியல் கல்லூரி, அசோகபுரம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, கோவை அரசு கலைக் கல்லூரி, சித்தாபுதூர் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி உள்ளிட்ட 16 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்வர்கள் கைக்கடிகாரம், கைப்பேசி, ஹெட்போன், கேமரா, கால்குலேட்டர் உள்ளிட்ட எலெக்ட்ரானிக் சாதனங்களை எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேர்வு மையத்துக்குள் பிற்பகல் 1.30 மணிக்குள் செல்ல வேண்டும் என்றும், தேர்வு சரியாக 2 மணிக்குத் தொடங்கி 5.20-க்கு நிறைவடையும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கனமழை: மேட்டுப்பாளையம் அருகே ஏராளமான வாழை மரங்கள் சேதம்

கனமழை காரணமாக வெள்ளியங்காடு பகுதியில் சேதமடைந்த வாழை மரங்கள்.

மேட்டுப்பாளையம், மே 1: மேட்டுப்பாளையம் அருகேயுள்ள வெள்ளியங்காடு மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வியாழக்கிழமை பெய்த கனமழையால் சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் சேதமடைந்தன.

கோவை மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக சுட்டெரித்து வந்த வெயில் காரணமாக மக்கள் அவதியடைந்து வந்தனர். இந்நிலையில், மேட்டுப்பாளையம், காரமடை, சுற்றுவட்டாரப் பகுதிகளில் வியாழக்கிழமை மாலை பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. சுமார் 1 மணி நேரத்துக்குமேலாக பெய்த இந்த மழையால் வெள்ளியங்காடு மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டிருந்த சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் முறிந்து விழுந்தன.

இதனால், பாதிக்கப்பட்ட விவசாயிகள் சாம்ராஜ், கந்தசாமி உள்ளிட்டோர் கூறுகையில், ஓணம் பண்டிகையை எதிர்நோக்கி அறுவடை செய்ய தயார் செய்யப்பட்டு வந்த நேந்திரன், கதளி உள்ளிட்ட வாழைத்தார்கள் இந்த திடீர் மழையால் சேதமடைந்துள்ளன. ஒவ்வொரு வாழைக்கும் ரூ.150 முதல் ரூ.200-க்குமேல் செலவு செய்து தயார் செய்யப்பட்டு வந்த நிலையில் ஒரேநாளில் அனைத்தையும் இழந்துள்ளோம். ரூ.2 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. சேதமடைந்த வாழைகளுக்கு இழப்பீடு வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

வாக்கு எண்ணிக்கை: கட்சி பிரதிநிதிகளுடன் தேர்தல் அலுவலர் ஆலோசனை

வாக்கு எண்ணிக்கை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர்.

கோவை, மே 1: வாக்கு எண்ணிக்கை தொடர்பாக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் மாவட்டத் தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான பவன்குமார் க.கிரியப்பனவர் வெள்ளிக்கிழமை ஆலோசனை நடத்தினார்.

தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை வரும் 4-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இந்நிலையில், கோவை மாவட்டத்தில் வாக்கு எண்ணிக்கை நடத்துவது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு தலைமை வகித்து தேர்தல் அலுவலர் பவன்குமார் க.கிரியப்பனவர் பேசியதாவது: வேட்பாளர்கள், முகவர்கள் வாக்கு எண்ணும் மையத்தில் படிவம் எண் 18-ஐ முறையாக பூர்த்தி செய்து புகைப்படத்துடன் கூடிய, க்யூ ஆர் கோடு அடிப்படையிலான அடையாள அட்டையை தேர்தல் நடத்தும் அலுவலர் மூலம் பெற்றிருக்க வேண்டும். வாக்கு எண்ணும் அறையில் முகவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வழியாகச் சென்று தொடர்புடைய மேஜையின் அருகில் அமர வேண்டும்.

வாக்கு எண்ணும் மையத்தில் குடிநீர், உணவு, மருத்துவம், கழிப்பறை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வாக்கு எண்ணிக்கை தொடங்குவதற்கு முன்னதாக தேர்தல் நடத்தும் அலுவலர் முன்னிலையில் உறுதிமொழி எடுக்கப்பட வேண்டும். வாக்கு எண்ணும் மையத்துக்குள் முகவர்கள் கைப்பேசி எடுத்து வர அனுமதியில்லை. வாக்குச் சாவடி வாரியாக வேட்பாளர்கள் பெற்ற வாக்கு விவரங்கள் ஒளிபரப்பப்படுவதை வாக்கு எண்ணும் மைய ஒருங்கிணைப்பாளர் தெரிவிப்பார்.

இதைப் பார்வையிட ஒவ்வொரு மேஜைக்கும் நுண் பார்வையாளர் நியமிக்கப்பட்டுள்ளார். வேட்பாளர் சுற்று வாரியாக பெறப்பட்ட வாக்கு விவரங்கள் குறித்து முகவர்களின் ஒப்பம் பெறப்பட்ட பின்னரே தேர்தல் நடத்தும் அலுவலரின் மேஜைக்கு அனுப்பப்படும். வாக்கு எண்ணும் மையத்தில் ஏதேனும் சந்தேகம் எழுந்தால் தேர்தல் நடத்தும் அலுவலரின் கவனத்துக்கு கொண்டு செல்லலாம். வாக்கு எண்ணிக்கை அமைதியான முறையில் நடைபெற முகவர்கள் ஒவ்வொருவரும் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், விஜயராஜ் (டிட்கோ), ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) மகேஸ்வரி, வட்டாட்சியர் (தேர்தல்) தணிகைவேல், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

சித்ரா பௌர்ணமி: வெள்ளிங்கிரி மலையேற குவிந்த பக்தர்கள்

வடவள்ளி, மே 1: சித்ரா பௌர்ணமியையொட்டி, வெள்ளிங்கிரி மலையேறி ஏராளமான பக்தர்கள் வெள்ளிக்கிழமை தரிசனம் செய்தனர்.

கோவை மாவட்டம், பூண்டியில் பிரசித்தி பெற்ற வெள்ளிங்கிரி ஆண்டவர் கோயில் உள்ளது. கோயில் அருகே 7 முகடுகளைக் கொண்ட மலை உள்ளது. இந்த மலையில் சுயம்பாக வீற்றிருக்கும் ஈசனை தரிசிக்க குறிப்பிட்ட மாதங்களில் மட்டுமே பக்தர்களுக்கு வனத் துறை சார்பில் அனுமதியளிக்கப்படும்.

அதன்படி, நடப்பு ஆண்டு பிப்ரவரி முதல் மே மாதம் வரை மலையேற பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த மூன்று மாதங்களாக பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மலையேறி சுவாமி தரிசனம் செய்துள்ளனர்.

இந்நிலையில், சித்ரா பௌர்ணமியையொட்டி, வெள்ளிக்கிழமை ஏராளமான பக்தர்கள் மலையேறி சுவாமி தரிசனம் செய்தனர்.

மலையேறுவோர் பிளாஸ்டிக் பொருள்கள், எளிதில் தீப் பற்றக்கூடிய பொருள்களை எடுத்துச் செல்லக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், வனத் துறையினர் தீவிர சோதனைக்குப் பிறகே பக்தர்களை மலையேற அனுமதித்தனர்.

பாதுகாப்புப் பணியில் ஏராளமான போலீஸார் ஈடுபட்டிருந்தனர்.

மலேரியா இல்லாத தமிழகத்தை உருவாக்க நடவடிக்கை

மத்திய குழு விரைவில் ஆய்வு

கோவை, மே 1: தமிழகத்தில் மலேரியா பரவலைத் தடுக்கும் வகையில் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து மத்திய சுகாதாரக் குழுவினர் விரைவில் நேரடி ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

தேசிய சுகாதார இயக்கத்தின் இலக்குப்படி, வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை மலேரியா இல்லாத நாடாக மாற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, 2027-ஆம் ஆண்டுக்குள் அந்தந்த மாநிலங்களில் மலேரியா பரவலை முற்றிலும் தடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, கடந்த 10 ஆண்டுகளாக தீவிர ஒழிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. காய்ச்சல் அறிகுறி உள்ளவர்களுக்கு ரத்தப் பரிசோதனை, பாதிப்பு உறுதி செய்யப்பட்டால் அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள வீடுகளில் வசிப்போருக்கு பரிசோதனை மேற்கொண்டு சிகிச்சை அளித்தல் போன்ற பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

தமிழகத்தைப் பொருத்தவரை 33 மாவட்டங்களில் தற்போது மலேரியா பாதிப்பு இல்லை. இருப்பினும், சென்னை, செங்கல்பட்டு, சேலம், தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் மட்டும் குறைந்த அளவில் பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்கள் மீது கூடுதல் கவனம் செலுத்த மத்திய சுகாதாரத் துறை உத்தரவிட்டுள்ள நிலையில், மலேரியா பாதிப்பு இல்லாத மற்ற 33 மாவட்டங்களில் பராமரிக்கப்படும் தரவுகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மத்திய குழுவினர் ஆய்வு செய்ய உள்ளனர். இதற்காக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஆவணங்களைத் தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து கோவை மண்டல சுகாதாரத் துறை துணை இயக்குநர் பாலுசாமி கூறுகையில், பரிசோதனை, சிகிச்சை மற்றும் கண்காணிப்பு ஆகிய நிலைகளில் நாங்கள் தீவிர களப் பணியாற்றியுள்ளோம். தொடர் காய்ச்சல் இருப்பவர்களுக்கு ரத்தப் பரிசோதனை செய்து உறுதியாகும்பட்சத்தில், 12 மாதங்கள் தொடர்ந்து கண்காணிக்கிறோம். குறிப்பாக, வெளிமாநிலத் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு இருந்தால், அவர்கள் இடம் பெயரும்போது உரிய மருத்துவ அறிக்கையை அவர்களது சொந்த ஊர் சுகாதார நிலையங்களுக்கு அனுப்பி, தொடர் கண்காணிப்பு உறுதி செய்யப்படுகிறது என்றார்.

உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக... www.dinamani.com

பெயர் மாற்றம்
ரேவதி (Revathi) த/பெ. திருமலைசாமி, பிறந்த தேதி 14.09.1992 (பிறப்பிடம் : திருப்பூர்) 1/19, ராசகவுண்டர் தோட்டம், ஊத்துக்குளி ஆர் எஸ். பல்வைராயன் பாளையம், திருப்பூர்-638752, தமிழ்நாடு, இந்தியா, ஆகிய நான் கூறுவது யாதெனில், எனது பெயர் ரேவதி (Revathi) இனிமேல் **ரேவதி கருப்புசாமி (REVATHI KARUPPUSAMY)** என்று அழைக்கப்படுவேன்.
ரேவதி (Revathi)
திருப்பூர், 01.05.2026

IDBI BANK
ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' கேஸில், பாக்ட் பாலகந்தம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.
ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய ரூ.65,68,478/- (30.04.2026 தேதி அன்று) தொகையை திருமதி.ரத்னா தேவி.S மற்றும் திரு.மணிபாரதி.S, என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, கொள்நிலை கவாதீனம் (Physical Possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, 25.05.2026 தேதியில் (காலை 10.30 முதல் 11.30 மணி வரை) விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு' என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.62,00,000/- மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.6,20,000/-.

அசையாச் சொத்து விபரம்
கோயம்புத்தூர் மாவட்டம் – 641 041, கோயம்புத்தூர் வடக்கு தாலூகா, எண்.4, வீரபாண்டி கிராமத்தில் சர்வே எண்.312/2A3, "ஸ்ரீ ராம் கார்டன்ஸ்" ல் அமைந்த மனை எண்.A15 வடகிழக்குப் பகுதி, A16 கிழக்குப் பகுதியில் 1578 சதுர அடி (1350 சதுர அடி கட்டப்பட்ட பகுதி) விஸ்தீரண நிலமாகிய குடியிருப்புச் சொத்து திரு.S.மணிபாரதி பெயரில் உள்ளது.
விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் www.idbi.bank.in இணையதளத்தில் பார்வையிடலாம்.
தேதி : 30.04.2026 ஒம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : கோயம்புத்தூர் ஐடிபிஐ வங்கி

பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda
இராமநாதபுரம் கிளை : மே பிளவர் சக்தி காம்ப்ளக்ஸ், நஞ்சுண்டாபுரம் ரோடு, இராமநாதபுரம், கோயம்புத்தூர் – 641 036, போன் : 0422 2322177
மின்னஞ்சல் : vjrprm@bankofbaroda.bank.in

கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர்களுக்கான கோரிக்கை அறிவிப்பு
(2002, சர்பேசி சட்டம் பிரிவு 13(2) ன் கீழான அறிவிப்பு)

பெறுநர் : கடன்தாரர்கள் : M/s. காட்ஸ் கிஃப்ட் ஸ்லீப் மேட்ரஸ், பிரதிநிதியாக அதன் உரிமையாளர், திரு.முகம்மது சல்மத் நவாஸ் M, எண்.13-2, ராமுகுட்டி லேஅவுட், பியூன்ஸ் காலனி 5, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர் – 641 030 (கடன்தாரர்), திரு.முகம்மது சல்மத் நவாஸ் M, எண்.20/5, ராமுகுட்டி லேஅவுட், பியூன்ஸ் காலனி 5, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர் – 641 030 (கடன்தாரர்),

மதிப்பிற்குரியீர்,
பொருள் : எமது இராமநாதபுரம் கிளையில், பெற்ற கடன் வசதிகள் :
1.திரு.முகம்மது சல்மத் நவாஸ் M, ஆகிய தங்களுக்குப் பல்வேறு கடன் வசதிகளை அனுமதித்தும், அனுமதிக்கான நிபந்தனை விதிகளைத் தெரிவித்தும் அனுப்பப்பட்ட எமது கடிதம் எண்.VJRPRM/ADV/2023-24 /நாள் : 07.08.2023 ஐ தங்கள் பார்வைக்குக் கொண்டு வருகிறோம். அதில் கண்ட அனுமதிக்கினங்க, அதற்கான பிணையத்தை ஏற்படுத்தி கீழே குறிப்பிட்டவாறான கடன் வசதிகளை தாங்கள் அனுபவிக்க ஆரம்பித்தீர்கள். அவ்வாறான கடன் கணக்குகள், பிணையை நலன் உருவாக்கத்தின் பின்னர் அவற்றின் தற்போதைய நிலுவைகள் கீழ்வருமாறு :
வசதியின் தன்மை மற்றும் வகை : Term Loan Under Baroda Premium LAP கணக்கு எண். (75280600004864)
கடன் தொகை : ரூ.33,50,000/- (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)
வட்டி விகிதம் : 2.25% above BRLLR (Repo Rate 5.25% + Mark Up 2.65%) plus SP (0.25%) i.e. Presently - 10.40%
நிலுவைத் தொகை 13.12.2025 தேதி வரை : ரூ.31,47,066.80 (ரூபாய் முப்பத்து ஒரு லட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து அறுபத்து ஆறு மற்றும் பைசா எண்பது) வட்டி, செலவுகள் மற்றும் கட்டிணங்களுடன்
பிணைய ஒப்பந்தம் பிணையச் சொத்தின் கருக்க விபரத்துடன் :
கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி சார் பதிவு அலுவலகம், கோயம்புத்தூர் தாலூகா, கவுண்டம்பாளையம் கிராமம், ராமுகுட்டி லேஅவுட், சர்வே எண்.45, டவுன் சர்வே எண்.26, பழைய சர்வே எண்.45/38, வார்டு F, பிளாக் எண்.124 ல் அமைந்த பதிவு செய்யப்பட்ட பத்திரப் பதிவின் பிணைய அடிப்படையிலான குடியிருப்புச் சொத்து, 1 சென்ட் 334 சதுரடிக்குச் சமமான 770 சதுரடி மனை (இனம்-1) மற்றும் 1 சென்ட் 395 சதுரடிக்குச் சமமான 830 சதுரடி மனை (இனம்-2) ஆக மொத்தம் 1,600 சதுரடி மனையிடம், அதனோடான கதவு எண்.5/13A, B, C கொண்ட தார்க்க் குடியிருப்புக் கட்டிடம், 1. முகமது கௌஸ் மனைவி திருமதி. G.ஷம்ஷத் மற்றும் முகமது கௌஸ் மகன் திரு. முகமது சலமத் நவாஸ் ஆகியோருக்குச் சொந்தமானது. ஆவண எண்.4853/2005 ன்படியான சொத்தின் பரப்பு, சொத்தின் குறிப்பிட்ட எண்கள் மற்றும் முகவரி அதன் எல்லைகள் மற்றும் அளவுகளின் விபரங்களுடன் : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலூகா, கவுண்டம்பாளையம் கிராமம், சர்வே எண்.45 ல் உள்ள 2.41 ஏக்கர் புஞ்சை, இதில் வடபுறப் பகுதியில் தென்புறக் கோடியில் அமைந்த 0.3½ ஏக்கர் புஞ்சை, இதில் ஆவண எண்.2549/2001 கீழ் விற்பனைப் பத்திரத்தின்படியான 770 சதுரடி மனையிடம் அமைந்த எல்லைகள் விபரம் : காளியப்ப கவுண்டர் மற்றும் பிறருக்குச் சொந்தமான சொத்துக்கு வடக்கு, M.முகமது கௌஸுக்கு விற்ற சொத்துக்குக் கிழக்கு, 20 அடி அகல கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, முத்துசாமி செட்டியாருக்குச் சொந்தமான சொத்துக்கு மேற்கு. அளவுகள் : கிழமேல் வடபுறம் – 19'3" கிழமேல் தென்புறம் 19'3" தென்வடல் கிழபுறம் 40'0" தென்வடல் மேற்புறம் 40'0" இந்த அளவுகளுள்ள 770 சதுரடி அல்லது 1 சென்ட் 334 சதுரடி மனை, அதிலமைந்த வடக்குப் பார்த்த ஒட்டு வீடு, அதன் பாத்தியதைகள், முன் வாசல் மற்றும் கொல்லைவெளி, மின்சார இணைப்பு, அதன் காப்புத் தொகை மற்றும் வழக்கமான வழித்தட உரிமைகளுடன். கதவு எண்.5/13 B, C, ராமுகுட்டி லேஅவுட். வரி விதிப்பு எண்.10781, சர்வீஸ் இணைப்பு எண்.1689. இச்சொத்து கவுண்டம்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்டு அமைந்துள்ளது.
ஆவண எண்.4854/2005 ன்படி : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலூகா, கவுண்டம்பாளையம் கிராமம், ராமமூர்த்தி லேஅவுட், சர்வே எண்.45 ல், வடபுறப் பகுதியில் தென்புறக் கோடியில் அமைந்த புஞ்சை ஏக்கர் 2.41 இதனுள் அமைந்த 0.3½ ஏக்கர் புஞ்சை, இதில் ஆவண எண்.2548/2001 கீழ் விற்பனைப் பத்திரத்தின்படியான 830 சதுரடி மனையிடம் அமைந்த எல்லைகள் விபரம் : காளியப்ப கவுண்டர் மற்றும் பிறருக்குச் சொந்தமான சொத்துக்கு வடக்கு, C.சங்கராபரத்துக்கு விற்ற சொத்துக்குக் கிழக்கு, 20 அடி அகல கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, G.சம்ஷத்துக்கு விற்ற சொத்துக்கு மேற்கு. அளவுகள் : கிழமேல் வடபுறம் – 20'9" கிழமேல் தென்புறம் 20'9" தென்வடல் கிழபுறம் 40'0" தென்வடல் மேற்புறம் 40'0" இந்த அளவுகளுள்ள 830 சதுரடி அல்லது 1 சென்ட் 395 சதுரடி மனை, அதிலமைந்த வடக்குப் பார்த்த ஒட்டு வீடு, அதன் பாத்தியதைகள், குடிநீர் இணைப்பு, அதன் காப்புத் தொகை, முன் வாசல் மற்றும் கொல்லைவெளி, மின்சார இணைப்பு, அதன் காப்புத் தொகை மற்றும் வழக்கமான வழித்தட உரிமைகளுடன். கதவு எண்.5/13 A, ராமுகுட்டி லேஅவுட். வரி விதிப்பு எண்.2303, சர்வீஸ் இணைப்பு எண்.381. குடிநீர் இணைப்பு எண்.784. இச்சொத்து கவுண்டம்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்டு அமைந்துள்ளது.
2. மேற்குறிப்பிட்ட கடன் அனுமதியின் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படி தாங்கள் கடனைத் திரும்பச் செலுத்தத் தவறிவிட்டீர்கள் என்பதால் தாங்கள் விதிகளையும் நிபந்தனைகளையும் மீறி விட்டீர்கள் என்பதைத் தாங்கள் அறியவும்.
3. மேற்கண்ட தொகையை செலுத்துவதில் தாங்கள் தவறிவிட்ட காரணத்தால் தங்கள் கடன் கணக்கு 09.12.2025 அன்று, ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கினங்க வாராக்கடன் எனத் தீர்மானிக்கப்பட்டது. எமது தொடர்ச்சியான வேண்டுகோள்கள் மற்றும் கேட்புகளின் பின்னரும் தாங்கள் காலங்கடந்து விட்ட அக்கடன்களையும் வட்டி உட்பட திரும்பச் செலுத்தவில்லை.
4. மேலே குறிப்பிட்டவாறான பல்வேறு பிணையங்களால் பிணையப்படுத்தப்பட்ட கடன் வசதிகள் மீதான தங்கள் நிலுவைகளைத் கடன்தாரர் திரும்பச் செலுத்த இயலாது விட்டதாலும், தங்கள் கடன் கணக்கு வராக்கடன் கணக்கெனவகைப்படுத்தப்பட்டதாலும், நாங்கள் சர்பேசிச் சட்டம் 2002 பிரிவு 13ன் உப பிரிவு 2ன் கீழ் தங்களுக்கு, தாங்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகை, பத்திரி 1ல் குறிப்பிட்டவாறு இந்த அறிவிப்பு நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்தக் கோரி கேட்பு அறிவிப்பு அனுப்பப்படுகிறது. மேலும் அவ்வாறு மேற்குறிப்பிட்ட தொகை முழுவதும், திரும்பச் செலுத்தப்படும் நாள்வரையான வட்டி சேர்த்துத் தாங்கள் செலுத்தத் தவறினால் நாங்கள் மேற்சொன்ன சட்டப் பிரிவு 13 ன் உபபிரிவு 4ன் கீழ் எமக்களிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு/அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தி நிலுவை வசூலிக்க நேரிடும் என்பதைக் குறித்துக் கொள்ளவும்.
5. தாங்கள் கடன் வசதி பெற்றுள்ள இனங்கள் அனைத்துக்கும் மேற்குறிப்பிட்ட பத்தி 1ல் குறிப்பிட்டவாறான ஒவ்வொரு கடன் வசதிக்கும் ஒப்புக் கொள்ளப்பட்ட வீதத்திலான வட்டி சேர்த்துச் செலுத்த நேரிடும் என்பதையும் அறியவும்.
6. மேற்சொன்ன சட்டத்தின் உபபிரிவு எண்.13க்குத் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. அதில் கண்ட நிபந்தனைப்படி தாங்கள் மேலே பத்தியில் சொல்லப்பட்ட பிணையச் சொத்துக்களை எந்த ஒருவிதத்திலும், விற்பனை மூலம், குத்தகை அல்லது பிறவழிகளில் (சாதாரண வணிக வழி முறைகளிலல்லாது) எங்களது எழுத்துமூலமான முன் அனுமதியின்றி உரிமை மாற்றம் மேற்கொள்வது தடைக்குள்ளாகிறது. அத்துடன், அவ்வாறு பிரிவு 13 (உபபிரிவு 13) ல் சொல்லப்பட்ட நிபந்தனைகளை மீறுவது, மேற்படி சட்டத்தின் 29வது பிரிவின்படி தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும்.
7. மேலும், வங்கியால் தங்களிடம் கோரப்பட்ட தொகை அனைத்தும், பிற கட்டணங்கள், செலவினங்கள் சேர்த்து, இச்சொத்தின் பொது ஏலம்/விலைப்புள்ளி கோரல்/டெண்டர்/தனிநபர் ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான அறிவிப்பு வெளியிடப்படும் நாளுக்கு முன்னர் செலுத்திவிட்டீர்கள் என்றால், தாங்கள் பிணையம் வைத்துள்ள சொத்துக்கள் முழுவதையும் மீட்டுக் கொள்ளலாம் என்ற மேற்படி சட்டப் பிரிவின் 13வது பிரிவு உபபிரிவு (8)க்குத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அவ்வாறு அன்றி மேற்சொன்ன அறிவிப்பு வெளியிடப்பட்டுவிட்டால், பிணையச் சொத்துகளை மீட்டுக் கொள்